Office of the Director of Town and Country Planning,
807, Anna Salai, Chennai – 600 002.

Roc. No.24935/10 GR

Dated: 7.3.2011

Circular

Sub: Town and Country Planning – Insertion of new section 47(A) in the Tamil Nadu Town and Country Planning Act 1971 with regard to conversion of wet land into other purposes – Guidelines issued – Regarding.

Ref: 1) Act No.46 of 2010 of the Tamil Nadu Legislative Assembly received the assent of the Governor on the 29th November 2008 and published in the Tamil Nadu Government Gazette

2) G.O.(Ms.) No.302Housing and Urban Development (UD4-1) Department, Dated: 29.12.2010

------

In the reference first cited, Government has amended the Tamil Nadu Town and Country Planning Act, 1971, which came into effect on the 1st day of January 2011 by inserting a new section 47(A) to control the development of land in an area other than planning area and sub-section (3) of the said section enables for prior concurrence of the District Collector while converting wet land into other uses. Also, sub-section (3) provides for prescribed guidelines to be framed for this purpose.

In this regard, the following guidelines have been suggested by this department which shall be followed while according concurrence for conversion of wet land.

Inspection to be made by the District Collector with Regional Deputy Director and other officials as the Collector deems necessary and give his/her considering the following issues in his/her inspection report

1) The surrounding development around the proposed site has to be taken into consideration.
2) Details on the assured irrigation source/ ayacut
3) Present status of cultivation and for how long cultivation is not being carried out.
4) It should be ensured that due to forming of layout or construction of buildings, the irrigation canals and distribution channels are not obstructed and affected, thereby depleting ground water level, inundation of nearby areas, problems of sanitation and waste water disposal does not arise.

These guidelines shall come into immediate effect. The above circular shall be acknowledged by return of post.

for Director of Town and Country Planning

To
All the District Collectors.
All RDDs.

Copy to:
E-Governance,
Joint Director, All Assistant Directors, Head office

**உயர்கல்வி(இ1)த்துறை**

**கடித (நிலை) எண். 152 , நாள்.23.6.2011**

அனுப்புநர்
முனைவர்.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: சுயநிதிக் கல்லூரிகள் – நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அனுமதி வேண்டும் கல்வி முகமைகளின் விண்ணப்பங்களின் மீதான ஆய்வறிக்கையை அரசுக்கு அனுப்ப வேண்டுவது – தொடர்பாக.

******

ஆண்டுதோறும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அனுமதி வேண்டி கல்வி முகமைகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் தெரிவித்துள்ள நிலங்கள் மற்றும் அக்கல்லூரி தொடங்கிட நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு முதலாமாண்டு வகுப்புகளை நடத்திட அனைத்து அடிப்படை வசதிகளும், போதுமான வகுப்பறைகளும் உள்ளனவா என்பதை சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் ஆய்வு செய்து அதனடிப்படையில், அனுப்பப்படும் ஆய்வறிக்கை மற்றும் இதற்கு ஆதாரமாக கல்வி முகமைகளால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் அக்கல்லூரிகளைத் துவங்கிட கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசால் கருத்துருக்கள் பெறப்படுகின்றன.

2. இந்நிலையில், இனிவரும் காலங்களில் அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அரசின் அனுமதி வேண்டி மண்டல கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆய்வறிக்கையுடன் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுப்பி வைக்கப்படும் கருத்துருக்களை பரிசீலிக்க ஏதுவாக, கல்வி முகமைகளிடமிருந்து தங்களுக்கு நேரிடையாக அனுப்பப்படும் விண்ணப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள, துவங்கப்படவுள்ள கல்லூரிகளுக்கான நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர் ஊரமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா? மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) இவற்றிற்கான மண்டலம் என்ன? மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதா மற்றும் கல்லூரிகள் அவ்விடத்தில் அமைவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது ஆய்வு செய்து தங்களின் ஆய்வறிக்கையினை நேரடியாக அரசுக்கு அனுப்புமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்:
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை –6.
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/ உதிரி.

**உயர்கல்வி(இ1)த்துறை**

**கடித (நிலை) எண். 153, நாள்.23.6.2011**

அனுப்புநர்
முனைவர்.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.

அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வி – நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் – சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டுவது – தொடர்பாக.

பார்வ: 1. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.29.9.09.
2. அரசாணை (நிலை) எண். 4, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.

******

பார்வையில் காணும் அரசாணைகளின்மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. இவற்றினைத் தொடர்ந்து, இனி வரும் காலங்களில், அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அரசின் அனுமதி வேண்டி கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்கும் போதே இவ்விண்ணப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள, துவங்கப்படவுள்ள கல்லூரிகளுக்கான நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர் ஊரமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா? மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) இவற்றிற்கான மண்டலம் என்ன? மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதா மற்றும் கல்லூரிகள் அவ்விடத்தில் அமைவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது சார்ந்த மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினையும் பெற்று பரிசீலிக்க ஏதுவாக, சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கும் விண்ணப்பிக்குமாறு கல்வி முகமைகளுக்கு அறிவுறுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இ.கோ / உதிரி.